மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>12.08.2025 வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 12 ம் வாதி ஆவேன். இந்த வழக்கிற்காக கூடுதல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 01.12.2012 தேதியிட்ட சேமலைபேயர் என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.31
2. 24.09.2012 தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.226/2012 ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.32
3. 24.09.2012 தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.226/2012 ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.33
4. 20.11.2012 தேதியிட்ட காங்கயம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் Cmp. No.6380 /2012 உத்தரவு சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.34
5. 04.10.2021 தேதியிட்ட மின்கட்டண ரசீதுகள் அசல் ( எண்ணிக்கை 2) –வா.சா.ஆ.35

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.35 ஆவணம் 2, 3 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்குரை சொத்து விபரத்தில் தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதாக குறிப்பிட்ட எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். நான் சொல்வது உண்மையல்ல என்றும் நான் இந்த வழக்கை தாக்கல் செய்த போது வழக்குரையில் தாவா சொத்தில் உள்ள வீட்டு மற்றும் கிணற்றில் மின் இணைப்பு உள்ளதாக குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.35 ஆவணமான மின் கட்டண ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டு என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.35 ரசீதுகள் இரண்டும் எனது பெயரில் தனிப்பட்ட முறையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீதுகள் எந்த புல எண், எந்த கதவு எண் பொறுத்து ஏற்பட்டது என்று அதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ரசீதுகளில் எந்த மின்பகிமான அலுவலகத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை பொறுத்ததில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த மின் பகிர்மான அலுவலரால் வசூல் செய்யப்பட்டது என்பதற்கான முத்திரை நான் தாக்கல் செய்த மின் கட்டண ரசீதில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கு உண்டான மின்கட்டண ரசீதுகளை தாவா சொத்திற்கு உண்டான மின் கட்டண ரசீதுகளாக நான் இந்த வழக்கில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் நான் தாக்கல்

செய்துள்ள மின் கட்டண ரசீதுகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.12 18:43:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.